
# இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை




***சக 15:5 ............... என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்.***

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு! இரட்சகர் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். வேதாகம ஆட்சி முறைக்காலங்களில் இதற்கு முன்பாக, சபை எடுத்துக்கொள்ளப்படுதல், அந்திக்கிறிஸ்து, உபத்திரவக்கால சம்பவங்கள் போன்ற வேத பாடங்களை படித்தோம். இவற்றுக்கு அடுத்தபடியாக வேதாகம சரித்திரத்தில் நடைபெறப்போகும் சம்பவம் **"இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை".** இந்த வேதபாடத்தில் இதைப்பற்றி நாம் படிப்போம். **சபை எடுத்துக்கொள்ளப்படுதலும் ( The Rapture ),** இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் இரு வேறு சம்பவங்கள். இவற்றை தெளிவாக குறிப்பிடும் வசனங்கள் வேதாகமத்தில் இருக்கின்றன. இவ்வசனங்களை எடுத்து கையாளும்போது அவை சபை எடுத்துக்கொள்ளப்படுதலை குறிப்பிடும் வசனங்களா அல்லது இரண்டாம் வருகையை குறிப்பிடும் வசனங்களா என்று நன்கு அறிந்து அதன்பின் குறிப்பிடுவது நல்லது. மேலும் இரண்டாம் வருகையிலும் அதன் முன்னும் பின்னும் நடைபெறும் சம்பவங்களையும் குறிப்பிடும்போது அவற்றை வரிசையாக குறிப்பிடுவதுதான் சரி. ஏற்கனவே நடந்து முடிந்த சம்பங்களை இனி நடக்கப்போவதாகவும், அல்லது நடக்கப்போகிறவற்றை நடந்து முடிந்ததாகவும் அல்லது இப்போது நடந்து கொண்டிருப்பதாகவும் குறிப்பிடுவது தவறு. இதற்காக முறையான வேதாகம விளக்கவுரைகளை கையாளுவது நல்லது. இது போன்ற வேத பாடங்களை படிக்கு முன்பு அல்லது போதிக்கு முன்பு இச்சம்பவங்களை ஒரு பட்டியலிட்டு அல்லது ஒரு புள்ளி விபரப்படம் வரைந்து அதன்பின் படிப்பது போதிப்பது நல்லது. அப்போது முன்னுக்கு பின் முரணாக சம்பவங்களை குறிப்பிடுவது தவிர்க்கப்படலாம்.



**இரண்டாம் வருகையை குறிக்கும் சில வசனங்கள். ( இயேசு கிறிஸ்து தன் பரிசுத்தவான்களோடு பூமிக்கு வருதல்.)**

***தானியேல் 2:44-45; 7:13-14. சகரியா 14: 1-5, 9, 16-21. மத் 24:29-31; 25:31-46. 2 தெச 1:7-10; 2:8.***
***யூதா 1:14-15. வெளி 1:7; 19:11-21; 1 தெச 5:1-3; ஏசாயா 63:1-6; யோவேல் 3.***




## இரண்டாம் வருகையைப்பற்றி இயேசு கிறிஸ்து சொல்லும் காரியங்கள்

***மத் 24:3** பின்பு, அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள்.*




### இயேசுவிடம் கேட்கப்பட்ட மூன்று கேள்விகள்:

**இப்பாகத்தில் இயேசுவிடம் அவரது சீடர்கள் மூன்று விதமான கேள்விகளை கேட்கிறார்கள். இயேசு கிறிஸ்து இக்கேள்விகளுக்கு கொடுக்கும் பதிலில் இருந்து நாம் பல காரியங்களை முறையாக அறிந்து கொள்ளலாம்.**

**1.** ***எருசலேம் எப்போது அழிக்கப்படும் ?*** இந்த கேள்விக்கான பதில் ***லூக்கா 21:12-24*** ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**2.** ***இயேசுவின் வருகையின் அடையாளம் என்ன ?*** இதற்கான பதில் ***மத் 24:4-26, 37-39*** ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**3.** ***இயேசு கிறிஸ்து வரும்போது என்ன சம்பவிக்கும் ?*** இதற்கான பதில் ***மத் 24:27-31, 40-51; 25:1-46*** ல் கொடுக்கப்பட்டுள்ளது.




## இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் அடையாளம்

கீழ்க்காணும் அடையாளங்கள் **"இரண்டாம் வருகைக்கு"** மாத்திரமே உரித்தானவை. இவைகளில் பலதும் உபத்திரவக்காலத்தில் சம்பவிப்பவை. உலக சரித்திரத்தில் எப்போதும் யுத்தங்களும், அழிவுகளும், பஞ்சங்களும், பூமி அதிர்ச்சிகளும் சம்பவித்துக் கொண்டேதான் இருக்கின்றது. ஆனால் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கும் அழிவுகளும், நிகழ்வுகளும் இனிமேல் சம்பவிப்பதை மாத்திரமே குறிப்பிடுகின்றவை. கடந்த கால, நிகழ்கால சம்பவங்களாக இவைகளை குறிப்பிட்டு குழப்பக்கூடாது. இப்போது இரட்சிக்கப்பட்டு, விசுவாசத்தில் நிலைத்திருக்கும் ஒரு விசுவாசியும் இந்த சம்பவங்கள் பூமியில் நடைபெறும்போது அவற்றில் பங்கு கொள்ளவோ அவைகளால் பாதிப்படையவோ மாட்டார்கள். ஏனெனில் இந்த அடையாளங்கள் நடைபெறுவதற்கு முன்பாகவே அவர்கள் சபை எடுத்துக்கொள்ளப்படுதலில் இயேசுவோடு கூட எடுத்துக்கொள்ளப்பட்டு பரலோகத்தில் ஏழுவருடங்கள் இயேசுவோடு கூட மகிழ்ந்திருப்பார்கள்.




### 1. வஞ்சனைகள் *(மத் 24:4-5,11,24)*

*மத் 24:4 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்;*

யூதர்கள் பல முறை கள்ளதீர்க்கதரிசிகளாலும், வஞ்சிக்கிறவர்களாலும் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். அது போலவே இச்சமயத்திலும் அந்திக்கிறிஸ்து, கள்ளத்தீர்க்கதரிசி மற்றும் அவர்களை சார்ந்தவர்கள் போன்ற பலரும் யூதர்களை வஞ்சிக்க முயற்சிப்பார்கள். யூதர்கள் மெய்யான மேசியாவை அடையாளம் காண முடியாதபடி அவர்களை வஞ்சிப்பார்கள்.




### 2. கள்ளக்கிறிஸ்துக்கள் *(மத் 24:5,23-26)*

*மத் 24: 5 ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்.*

இயேசு கிறிஸ்துவை உண்மையான கிறிஸ்துவாக பலரும், முக்கியமாக யூதர்கள் பலரும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இச்சமயத்தில் அந்திக்கிறிஸ்துவை தங்களை காக்கும் மேசியாகவாக பலரும் ஏற்றுக்கொள்வார்கள். இதைத்தான் இயேசு கிறிஸ்து ***யோவான் 5:43*** ல் குறிப்பிடுகிறார். இச்சமயத்தில் அந்திக்கிறிஸ்து யூதர்களுடன் ஒரு உடன்படிக்கை செய்து அதன் மூலமாக யூதர்கள் வஞ்சிக்கப்பட்டு இருப்பார்கள்.




### 3. யுத்தங்களும் யுத்தங்களின் செய்திகளும்

*மத் 24:6 யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது. 7 ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்.*

உலக சரித்திரத்தில் எப்போதும் யுத்தங்களும் அவற்றின் செய்திகளும் வந்து கொண்டேதான் இருக்கின்றன. ஆனால் ***மத் 24:6*** ல்

குறிப்பிடப்பிடப்பட்டுள்ள யுத்தங்கள் அச்சமயத்தில், இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன்பு நடைபெறப்போகும் சில பிரத்யேக யுத்தங்கள் ஆகும். அந்த யுத்தங்களைப்பற்றிய செய்திகளும் அப்போது வரும்.




### 4. பஞ்சங்கள் *(மத் 24:7; வெளி 6:5-6)*

***வெளி 6: 6*** *அப்பொழுது, ஒரு பணத்துக்கு ஒருபடி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும், நான்கு ஜீவன்களின் மத்தியிலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டேன்.*

ஒருபணத்துக்கு ஒருபடி கோதுமை என்பதும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமை என்பதும், வழக்கமான விலையில் இருந்து சுமார் 8 மடங்கு அதிகமான விலையாகும். யுத்தங்களாலும் அவற்றின் செய்திகளாலும் கடுமையான பஞ்சம் நிலவும். மூன்றாம் முத்திரை உடைப்பின் விளைவுச்சம்பவங்கள் இவை.




### 5. கொள்ளை நோய்கள் *(மத் 24:7;)*

***வெளி 6:8*** *நான் பார்த்தபோது, இதோ, மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன்பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது.*

யுத்தங்களாலும், பஞ்சத்தாலும் பல கொள்ளை நோய்கள் வந்து மக்களில் பலர் மரித்துப்போவார்கள். இக்கொள்ளை நோய்கள் இப்போது இருக்கும் பல நோய்களை விட கடுமையான, மருத்துவத்தால் கட்டுப்படுத்த முடியாத கொள்ளை நோய்களாக இருக்கும்.




### 6. பூமியதிர்ச்சிகள் *(மத் 24:7; வெளி. 6:12-17)*

***வெளி 6:12*** *அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக்கண்டேன்; இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம் போலாயிற்று.*

இங்கே இரண்டாம் வருகைக்கு அடையாளமாக குறிப்பிடப்படும் பூமியதிர்ச்சிகள் இப்போது நடைபெறும் பூமியதிர்ச்சிகளை குறிப்பது அல்ல. இரண்டாம் வருகைக்கு அடையாளமான பூமியதிர்ச்சிகள் உபத்திரவக்காலத்தில் நடைபெறுபவை. **ஆறாம் முத்திரை** உடைக்கப்படும்போது நடைபெறுபவை. அந்த பூமியதிர்ச்சிகள் மிகவும் கடுமையாக இருக்கும். மக்கள் மலைகளிலும், குகைகளிலும் ஒளிந்து, சாவைத்தேடி ஓடுவார்கள். ஆட்டுக்குட்டியானவரின் கோபாக்கினையை மக்கள் அறிந்து கொள்ளும் சமயமாக அது இருக்கும்.




### 7. யூதர்கள் மேல் விரோதம் *(மத் 24:9; மாற் 13:9,13)*

***மத் 24:9*** *அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்.*

***மாற்கு 13:13*** *என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.*

யூதர்களுக்கு விரோதமாகவும், கிறிஸ்துவுக்கு விரோதமாகவும், இயேசுவை விசுவாசிப்பவர்களுக்கு எதிராகவும் அனைத்து மக்களும் எழும்புவார்கள், பகைப்பார்கள். பலர் கொல்லப்படுவார்கள், இரத்த சாட்சிகளாக மரிப்பார்கள். யூதர்களின் மேல் விரோதம் மிகவும் கடுமையாக இருக்கும்.

**8. இடறல்கள்** *(மத் 24:10; 18:1-10)*




*மத் 24:10 அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள்.*

ஒரு சமயத்தில் ஒருவருக்கொருவர் விசுவாசமாக இருந்த பலரும் இப்போது இடறலடைந்து ஒருவரை ஒருவர் காட்டிக்கொடுப்பார்கள். குடும்பங்கள், வீடுகள், நாடுகள் ஒருவரை ஒருவர் பகைக்கும். இதனால் அமைதி குலையும். யாராலும் சட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கும்.

**9. காட்டிக்கொடுத்தல்***(மத் 24:9; மாற் 13:12)*




*மாற்கு 13: 12 அன்றியும் சகோதரன் சகோதரனையும், தகப்பன் பிள்ளையையும் மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள்; பெற்றாருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி, அவர்களைக் கொலைசெய்வார்கள்.*

இயேசு கிறிஸ்துவை அக்காலத்தில் ஏற்றுக்கொள்பவர்கள் கடுமையான தண்டனைகளை சந்திக்க வேண்டியதிருக்கும். அதனால் ஒருவர் இயேசுவை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பது தெரிந்த உடன் அவரது சகோதரர், தகப்பன், பிள்ளைகள் போன்றவர்களே அவர்களை காட்டிக்கொடுப்பார்கள். உயிருக்கும் மேலாக நேசிக்க வெண்டிய சொந்த பெற்றோரே அவரது உதிரத்தில் உதிர்ந்த சொந்த பிள்ளைகளை கொலை செய்வார்கள்.

**10. கள்ளத்தீர்க்கதரிசிகள்** *(மத் 24:11,24; வெளி 13)*




*மத் 24: 11 அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்.*

அச்சமயத்தில் மகா உபத்திரவங்களினால் மக்கள் அனைவரும் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து திணறிப்போய் இருப்பார்கள். எங்கும் குழப்பமான சூழ்நிலை நிலவும். இந்த சூழலை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு பல கள்ள தீர்க்கதரிசிகள் எழும்புவார்கள். ஜனங்களுக்கு வழிகாட்டுவதாக, சத்தியத்தை போதிப்பதாக கூறிக்கொண்டு அநேகரை வஞ்சிப்பார்கள். மக்கள் பலரும் இவர்கள் பின் சென்று வஞ்சிக்கப்படுவார்கள்.

**11. அக்கிரம மிகுதியால் அன்பு தணிந்து போகுதல்** *(மத் 24:12-13; 2 தீமோ 3)* *மத் 24:12 அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்.*




எங்கு பார்த்தாலும் அக்கிரம செய்கைகள் நிறைந்து காணப்படும். மக்களில் பலரும் அக்கிரம் செய்கிறவர்களாக இருப்பார்கள். இதனால் அவர்களை வெறுப்பவர்கள் இருப்பார்கள். அக்கிரமக்காரர்களுக்கு எதிர் அக்கிரமம் செய்கிறவர்கள் இருப்பார்கள். இதனால் ஒட்டு மொத்தமாக மக்கள் ஒருவர் மேல் ஒருவர் அன்பு காண்பிக்க மாட்டார்கள். எங்கும் பகை தாண்டவமாடும்.

**12. சுவிசேஷ ஊழியம் அதிகமாகுதல்**




*மத் 24:14 ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்.*

**வெளி 7:1-8** ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி 1,44 000 முத்திரையிடப்பட்ட யூதர்களும் உலகமெங்கும் சுவிசேஷம் பிரசங்கிப்பார்கள். எல்லா தேசங்களுக்கும், எல்லா ஜாதிகளுக்கும் இரட்சிப்பின் நற்செய்தி சுவிசேஷமாக பிரசங்கிக்கப்படும். இது ஒரு பெரிய எழுப்புதலை உருவாக்குகிற சுவிசேஷமாக இருக்கும்.

**13. பாழாக்கும் அருவறுப்பு** ***( தானி 9:27; 2 தெச 2:4; வெளி 13)***




***மத் 24:15*** *மேலும், பாழாக்குகிற அருவருப்பைக்குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே .வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் .நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது,* அந்திக்கிறிஸ்து இஸ்ரவேல் ஜனத்தோடு **7** வருடங்கள் ஒரு உடன்படிக்கை செய்து கொள்வான். இதனால் இந்த 7 வருடங்களின் முதல் பாதி **3 ½** வருடங்கள இஸ்ரவேல் ஜனம் சற்று சமாதானமாக இருக்கும். இந்த மூன்றரை வருடங்களும் உபத்திரவக்காலத்தின் முதல் பகுதி. பின் அந்திக்கிறிஸ்துவின் ஒரு பிரதான எதிரியாகிய ஒரு நாடு ( இன்றைய ரஷ்ய நிலப்பரப்பாக இருக்கலாம் என்று சில வேத பண்டிதர்கள் கருதுகின்றனர் ) இஸ்ரவேல் ஜனத்துடன் போரிட வரும்போது தேவனுடைய செயலால் அழிக்கப்படுவார்கள். இதனால் தைரியமடைந்து அந்திக்கிறிஸ்து இஸ்ரவேல் நாட்டுடனான உடன்படிக்கையை முறித்துக்கொள்வான. தன்னுடைய ஒரு உருவச்சிலையை எருசலேம் தேவாலயத்தில் வைத்து, தனது கள்ள தீர்க்க தரிசி மூலம் அந்திக்கிறிஸ்துவை உலக மக்கள் முழுவதும் தெய்வமாக வணங்கும்படி செய்வான். இதைத்தான் தானியேல் தீர்க்க தரிசி பாழக்கும் அருவறுப்பு என்று அழைக்கிறார்.

**14. புதிய யூத தேவாலயம்** ***(மத் 24:15,26; வெளி 11:1-2; தானி 8:9-13; 9:27; 11:45; 2 தெச 2:4)***




இந்த தேவாலயம் அந்திக்கிறிஸ்துவின் சமயத்தில் இருக்கும் தேவாலயம். இதற்கு முந்தையதான ஏரோதுவின் தேவாலயம் இப்போது இல்லை. அந்திக்கிறிஸ்துவின் சமயத்தில் இருக்கும் தேவாலயத்தில்தான் அந்திக்கிறிஸ்து தன் சிலையை நிறுவுவான்.

**15. இரத்தசாட்சிகள்** ***(மத் 24:9,22; தானி 8:24; வெளி. 7:9-17; 11:7; 15:2-4; 20:4-6)***




***வெளி 7: 14*** *அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.*
மகா உபத்திரவக்காலத்தில் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டதனால் பலரும் கொல்லப்படுவார்கள். இரத்த சாட்சிகளாக மரிப்பார்கள்.

**16. யூதேயாவில் இருக்கிற யூதர்கள் ஓடிப்போகுதல்** ***(மத் 24:16-21; வெளி 12:6,14; ஏசாயா 16:1-5; தானி 11:40-45; எசே 20:33-38; ஓசியா 2:14-16)***




***மத் 24:16*** *யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்.*
இச்சமயம் அந்திக்கிறிஸ்து யூதேயாவை ஆட்கொண்டு தேவாலயத்தை தன் வசமாக்கிக்கொள்வான். அப்போது யூதர்கள் அனைவரும் **ஏதோம், மோவாப்** ஆகிய மலைப்பிரதேசங்களுக்கு ஓடிப்போவார்கள். பெட்ரா என்று இப்போது அழைக்கப்படும் மலைக்குகைகள் நிறைந்த இடத்தில் **1260** நாட்கள் இருப்பார்கள். ஜோர்டானியரும் அரேபியரும் அவர்களை பராமரிப்பார்கள். இவ்விதமாய் அவர்கள் அந்திக்கிறிஸ்துவிடம் இருந்து பாதுகாக்கப்படுவார்கள்.

**17. சாத்தானுடைய சக்தியால் அடையாளங்கள்,அற்புதங்கள்** ***( 2 தெச 2:8-12; வெளி 13;16:14;19:20)***




***மத் 24: 24*** *ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும்*

*வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.*

சாத்தானுடைய சக்தியால் கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்வார்கள். இதனால் யூதர்களில் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கூட வஞ்சிக்கப்பட்டு ஏமாறிப்போவார்கள்.




### 18. அளவற்ற புசித்தலும் குடித்தலும் *(மத் 24:38; லூக் 17:28;21:34)*

*மத் 24:38 எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண்கொடுத்தும்,*

மக்கள் புசித்தலுக்கும் குடித்தலுக்கும் அதிக முக்கியவத்துவம் கொடுத்து, அளவில்லாமல் புசிக்கிறவர்களாகவும் குடிக்கிறவர்களாகவும் இருப்பார்கள். தேவையான உடற்பயிற்சி மற்றும் உடலுழைப்பு இல்லாமல் மக்கள் இருப்பார்கள்.




### 19. பாலுறவுக்குற்றங்கள் *(மத் 24:38; லூக் 17:27)*

*லூக்கா 17: 27 நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள்வரைக்கும் ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள், பெண்கொண்டு கொடுத்தார்கள்; ஜலப்பிரளயம்வந்து எல்லாரையும் அழித்துப்போட்டது.*

*28 லோத்தினுடைய நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும்; ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள்.*

பாலுறவுக்குற்றங்கள் அதிகமாகும். லோத்தின் காலத்தில் நடந்தது போல மக்களில் பலர் செக்ஸ் குற்றங்களில் ஈடுபடுவர். பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகமாக நடக்கும். லோத்துக்கு செய்தது போல துணிகரமான பாலுறவு குற்றங்கள் அதிகமாகும்.




### 20. உணராதிருத்தல், சோம்பேறித்தனம் *(மத் 24:39)*

*மத் 24:39 ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்.*

எத்தனையோ முறை நோவா சுவிசேஷம் பிரசங்கித்தும் மக்கள் அதைக்கேட்பதற்கு ஒரு உணர்வும் இல்லாதிருந்தார்கள். அதுபோல இச்சமயத்திலும் மக்கள் இரட்சிப்பை பற்றியும், வருகையைப்பற்றியும் ஒருவித உணர்வும் இல்லாதிருப்பார்கள்.




## இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் சமயம்

வேதாகமத்தில் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எப்போது சம்பவிக்கும், அதற்கு முன்பு நடக்கும் அடையாளங்கள் போன்றவற்றைப்பற்றி தெளிவான வசனங்கள் உள்ளன. இயேசு கிறிஸ்து வரும் குறிப்பிட்ட மணிநேரம் வேதாகமத்தில் சொல்லப்பட வில்லை. ஆனாலும் எந்த சமயத்தில் இரண்டாம் வருகை சம்பவிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.




### 1. உபத்திரவக்காலம் முடிந்த உடன் *(மத் 25:31; வெளி11:1-19:21)*

*மத் 24:29 அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்.*

வெளிப்படுத்துதல் 11 ஆம் அதிகாரத்தில் இருந்து 19 ஆம் அதிகாரம் வரை குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உபத்திரவக்கால சம்பவங்களும் நிறைவேறிய பிறகு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

சம்பவிக்கும். அதாவது சபை எடுத்துக்கொள்ளப்பட்டு 7 வருடங்களுக்கு பிறகு.




**2. ஆயிர வருட அரசாட்சியின் தொடக்கத்தில்** *(வெளி 19:11-21; 20:1-10)* ***வெளி 19:11*** *பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும்*
*சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்.*
உபத்திரவக்காலம் முடிந்து அதன் பின் ஆயிர வருட அரசாட்சியின் தொடக்கத்தில் இயேசுவின் இரண்டாம் வருகை சம்பவிக்கும்.




**3. அந்திக்கிறிஸ்துவின் 3 ½ வருட ஆட்சிக்குப்பிறகு** *(வெளி 13:5;19:11-21; 2 தெச 2:7-8)*

***வெளி 13:5*** *பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது; அல்லாமலும், நாற்பத்திரண்டு மாதம் யுத்தம்பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது.*

42 மாதங்கள் என்பது **3 ½** வருடங்கள். அந்திக்கிறிஸ்து உபத்திரவக்காலத்தின் கடை மூன்றரை வருடங்கள் அரசாளுவான். அப்போது பெரிய காரியங்களை பேசவும், யுத்தங்களை நடத்தவும் செய்வான். அவனது ஆட்சிக்காலம் மூன்றரை வருடங்கள் நடந்த பிறகு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை சம்பவிக்கும்.




**4. இக்காலத்தின் கடைசியில்** *(மத் 13:38-43,47-50;24:3,29-31; மத் 25:31-46)*

*மத் 13:38 நிலம் உலகம்; நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர்; களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்;*
*39 அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு; அறுப்பு உலகத்தின் முடிவு; அறுக்கிறவர்கள் தேவதூதர்கள்.*
இக்காலகட்டத்தின் முடிவில். இப்போது இருக்கிற உலகத்தின் அதாவது உலக வாழ்க்கை காலத்தின் முடிவில். இதைத்தான் இயேசு கிறிஸ்து உவமைகள் மூலமாக மத்தேயு 13ம் அதிகாரத்தில் குறிப்பிடுகிறார்.




**5. பழைய ரோம சாம்ராஜ்யத்தினுள் 10 நாடுகளும் உருவாக்கப்பட்ட பிறகு** *(தானி 2:44-45; 7:23-24; வெளி 13:1-18; வெளி 19:11-21)*

***தானி 2:44*** *அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்.*

**6. லோத்து, நோவா போன்றவர்களின் காலத்தில் இருந்தது போல மிகவும் ஒழுக்கக்கேடான சமயத்தில்** *(மத் 24:37-51; லூக் 17:22-27; 2 தீமோ 3:1-13; 4:1-4 )*

***மத் 24: 38*** *எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண்கொடுத்தும்,*

***39** ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்.*

***லூக் 17: 28** லோத்தினுடைய நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும்; ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள்.* இச்சமயத்தில் மக்களின் ஒழுக்கக்கேடு இப்போது இருக்கிறதைப்போல் பல மடங்கு அதிகமாக இருக்கும். நோவாவின் சமயத்திலும், லோத்தின் சமயத்திலும் இருந்த ஒழுக்கக்கேடுகளைப்பற்றி சில சரித்திர வல்லுநர்கள்
குறிப்பிடும்போது, அவை இப்போது இருக்கும் நிலையை விட மிகவும் மோசமாக இருந்ததாக குறிப்பிடுகின்றனர்.




## 7. சபைக்காலத்துக்கு பிறகு *(2 தெச 2:7-8; அப் 15:13-18; யூதா1:14; சக 14:5)*

***2 தெச 2:7** அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது; ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது.*

***சக 14:5** ...............என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்.*

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் சமயத்தில், சபை பூமியில் இருக்காது. சபையின் காலம் முடிந்திருக்கும். *சகரியா 14:5* ன் படி, "தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்". இயேசுவோடு கூட பரிசுத்தவான்கள் பூமிக்கு வரவேண்டும் என்றால் அதற்கு முன்பு அந்த பரிசுத்தவான்கள் பூமியில் இருந்து எடுக்கப்பட்டிருந்தால் மாத்திரமே திரும்பி இயேசுவோடு வரமுடியும். இந்த வசனத்தின்படி இயேசுவோடு **"தேவனும்"** பூமிக்கு வருவார்.




## 8. எருசலேம் நகரம் படைகளால் சூழப்பட்டு, பாதி நகரம் பிடிக்கப்பட்ட உடன் *(சக 14:1-5,14- 21; யோவே 3)*

***சக 14: 2** எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன்; நகரம் பிடிக்கப்படும்; வீடுகள் கொள்ளையாகும்; ஸ்திரீகள் அவமானப்படுவார்கள்; நகரத்தாரில் பாதி மனுஷர் சிறைப்பட்டுப்போவார்கள்; மீதியான ஜனமோ நகரத்தை விட்டு அறுப்புண்டுபோவதில்லை.*

எருசலேம் நகரத்தை அந்திக்கிறிஸ்துவின் படைகளும், அர்மகெதோன் யுத்தத்துக்கு வந்த நாடுகளின் படைகளும் சூழ்ந்து அதனை தாக்கும். பாதி நகரம் பிடிக்கப்படும். வீடுகள் அழிக்கப்படும், பெண்கள் நாசமாக்கப்படுவார்கள். அச்சமயம் திடீர் என இயேசுகிறிஸ்தவின் இரண்டாம் வருகை இருக்கும்.




## 9. நீதிமான்களின் உயிர்த்தெழுதலுக்கு பிறகு, பாவிகளின் உயிர்த்தெழுதலுக்கு 1000 வருடங்களுக்கு முன்பு. *(வெளி 20:1-15; சக 14:5; யூதா 1:14)*

***சக 14:5*** .......................என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்.

சபை எடுத்துக்கொள்ளப்படுதலில் **( Rapture )** கிறிஸ்துவுக்குள் மரித்த அனைத்து நீதிமான்களும் உயிர்த்தெழுவார்கள், உயிரோடிருக்கும் அனைத்து நீதிமான்களும் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். இதற்கு பின் 7 வருடங்களுக்கு பிறகு இயேசுவின் இரண்டாம் வருகை இருக்கும். இதற்கு 1000 வருடங்களுக்கு பிறகு பாவிகள் உயிர்த்தெழ வைக்கைப்பட்டு வெள்ளை சிங்கான நியாயத்தீர்ப்புக்கு முன்பு நிறுத்தப்படுவார்கள். ஆகவே பாவிகளின் உயிர்த்தெழுதலுக்கும் **1000** வருடங்களுக்கு முன்பு இயேசுவின் இரண்டாம் வருகை இருக்கும்.



**10.** ***வெளி 4-19* நடந்து முடிந்த பிறகு** *( வெளி 19:11-21; வெளி 20:1-10 )*

*வெளி 1;19 நீ கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப்பின்பு சம்பவிப்பவைகளையும் எழுது;*

***வெளி 1:19; 4:1*** ஆகிய வசனங்களில் **“இவைகளுக்குப்பின்பு சம்பவிப்பவை”** என்று குறிப்பிடப்பட்டு ***வெளி 4-19*** வரை உள்ள அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள் அனைத்தும் நடந்து முடிந்த பிறகு இயேசுவின் இரண்டாம் வருகை இருக்கும்.




## இயேசு கிறிஸ்து மீண்டும் வருகிற விதம்




**1. மின்னலைப்போல வருவார்** *(மத் 24:27)*

***மத் 24: 27*** *மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்.*

மின்னலுடைய பிரகாசத்தை எல்லோராலும் காண முடியும். அது வானத்தில் தோன்றும்போது கிழக்கில் இருந்து மேற்கு வரை காண முடியும். அது போல இயேசுவின் வருகை எல்லோரும் காணும் விதத்தில் இருக்கும். ***வெளி 1:7*** ல் குறிப்பிட்டுள்ளபடி, அனைத்து மக்களும் அவரை தங்களுடைய கண்களால் காணும் விதத்தில் அவரது இரண்டாவது வருகை இருக்கும்.

**2. அழிவுகளோடு வருவார்** *(மத் 24:38-51; 25:31-46; 1 தெச 5:2; 1:7-10; 2 தெச 2:8; யூதா 1:14-15;*
*சக 14; வெளி 19:11-21)*

*1 தெச 5:3 சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை.*

இச்சமயத்தில் அந்திக்கிறிஸ்து, முன்னாள் ரோம சாம்ராஜ்யத்துக்குட்பட்ட 10 நாடுகளையும், அதற்கு வடக்கிலும் கிழக்கிலும் உள்ள நாடுகளையும் கைப்பற்றியிருப்பான். இதனால் உலகத்தார் இனிமேல் உலகத்தில் **“சமாதானமும் சவுக்கியமும்”** இருக்கும் என்று நம்புவார்கள். அதனால் அவர்கள் ஒன்று சேர்ந்து அந்திக்கிறிஸ்துவின் தலைமையில் எருசலேமை கைப்பற்ற நினைத்து அதை சூழ்ந்து பாதி கைப்பற்றியிருப்பார்கள். அப்போது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை சம்பவிக்கும். அப்போது அர்மகேதோன் யுத்தத்தில் எருசலேமுக்கு எதிராக போராடிய நாடுகளின் மேல் கடுமையான அழிவுகள் சம்பவிக்கும்.




**3. கண்கள் காணும்படியாக வருவார்** *(மத் 24:29-31; 2 தெச 1:7-10; வெளி 1:7; 19:11-21; சக 14)*

***மத் 24:30*** *அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும்* ***கண்டு*** *புலம்புவார்கள்.*

***வெளி 1:7*** *இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக்காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென்.*

பூமியின் மக்கள் தங்களது சரீரக்கண்களால் இயேசுகிறிஸ்துவை அப்போது காண முடியும். முக்கியமாக எருசலேமுக்கு எதிராக அர்மகேதோன் யுத்தத்தில் போராடுபவர்கள் இயேசுகை தங்கள் கண்களால் வானத்தில் கண்டு பயந்து, அழுது புலம்புவார்கள்.




**4. ஜுவாலித்து எரிகிற அக்கினியோடு வருவார்** *(2 தெச 1:7-10; 2:8; எசே 38:17-21; மலா 4:1-6)*

*2 தெச 1: 8 கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்.*




இயேசு கிறிஸ்து வானத்தில் வரும்போது அவரை சுற்றிலும் ஜுவாலித்து எரிகிற அக்கினி இருக்கும். அது பிரகாசமாக இருக்கும்.

**5. கோபாக்கினையோடும், நீதியுள்ள ஆக்கினையோடும் வருவார்** ***(வெளி 14:14-20; 19:11-21; யூதா 1:14-15; 2 தெச 1:7-10)***

*2 தெச 1: 7 தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு,*


*யூதா 1;14 ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனேக்கும் இவர்களைக்குறித்து: இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், 15 தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்.*




தேவனை அறிய முடிந்தும் அறியாமல் இருந்தவர்கள் மேலும், சுவிசேஷத்தை கேட்டும் அதற்கு கீழ்ப்படியாமல் இருந்தவர்களுக்கு தகுந்த தண்டனையோடு இயேசு கிறிஸ்து வருவார். இந்த தண்டனை அவர்களது செயலுக்கு ஏற்றபடியான தண்டனையாக இருக்கும்.

**6. வல்லமையோடும் மகிமையோடும் வருவார்** ***(மத் 16:27; 24:27-31; மத் 25:31-46)***

*மத் 24:30 அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் **வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும்** வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.*




இயேசு கிறிஸ்து வரும்போது, அவருக்கு எதிராக போராடிய அந்திக்கிறிஸ்துவின் சகல சேனைகளையும், வீரர்களையும், நாடுகளையும், சாத்தானுடைய விழுந்த தூதர்கள் அனைவரையும் முறியடிக்க போதுமான வல்லமையோடு வருவார். அவர்கள் அனைவரும் கண்களால் காணும்படியான அளவுக்கு மிகுந்த மகிமையோடு வருவார்.

**7. பரிசுத்தவான்களோடும் தூதர்களோடும் வருவார்** ***(சக 14:5; மத் 24:29-31; 25:31- 46; 1 தெச 1:7-10; யூதா 1:14; வெளி 17:14; 19:14)***

*மத் 25:31 அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்.*

*யூதா 1: 15 தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்.*




இயேசு கிறிஸ்து வரும்போது அவரோடு கூட பரலோக தூதர்கள் சேனைகளாக அணிவகுத்து வருவார்கள். அவர்களோடு கூட சபை எடுத்துக்கொள்ளப்படுதலில் உயிரோடு எழும்பிய, உயிரோடு இருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட அனைத்து பரிசுத்தவான்களும் அணிவகுத்து வருவார்கள்.

**8. மேகங்களோடு வருவார்** ***(மத் 24:29-31; 26:64; வெளி 1:7; தானி 7:13-14)***

*வெளி 1: 7 இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக்காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென்.*

அப் 1:9-11 ல் குறிப்பிட்டிருக்கிறபடி, இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் இருந்து எடுத்துக்கொள்ளப்பட்டபோது மேகங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டார். இப்போதும் அது போலவே மேகங்களில் திரும்பி வருவார்.




**9. ராஜாவாக நியாயாதிபதியாக வருவார்** *(வெளி 19:11-21; ஏசா 11; சக. 14; மத் 25:31-46)*

*வெளி 19:11 பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்.*

*16 ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலும் அவருடைய தொடையின் மேலும் எழுதப்பட்டிருந்தது.*

இயேசு கிறிஸ்து, வெள்ளைக்குதிரை மேல் யுத்தம்பண்ணுகிறவராக வருவார். ராஜாதி, ராஜாவாக, நீதியாய் நியாயந்தீர்த்து அந்திக்கிறிஸ்துவின் சேனைகளை தன் வாயின் வார்த்தையால் அழிக்கிறவராக வருவார்.




**10. திருடன் வருகிற விதமாய் வருவார்** *(1 தெச 5:2-4; வெளி 16:15)*

*1 தெச 5: 2 இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்.*

*வெளி 16:15 இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்.*

இயேசு கிறிஸ்துவின் வருகை எந்தவித முன்னறிவிப்பும் இன்றி, யாரும் எதிர்பார்த்திராத வேளையில் இருக்கும். இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு மக்கள் தயாராக இல்லாத சமயத்தில் அவரது வருகை இருக்கும். அதாவது ஒரு திருடன் எப்படி எந்த வித முன்னறிவிப்பும் இன்றி யாருக்கும் தெரியாமல் வருவானோ அது போல் இயேசுவின் வருகை இருக்கும்.




**11. இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து வருவார்** *( தானி l 7:13; மத் 24:29; வெளி 19:11-21. )*

*2 தெச 1:8 கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்.*

இயேசுவின் வருகையில் எடுக்கப்பட்ட பரிசுத்தவான்கள் அனைவரும் இச்சமயத்தில் பரலோகத்தில் 7 வருஷம் இயேசுவோடு மகிழ்ந்திருப்பார்கள். அதன்பின் பரலோகத்தில் இருந்து இயேசுவும் மற்ற தூதர்களும், பரிசுத்தவான்களும் வருவார்கள்.




## ஒலிவ மலை பிளக்கப்படுதல்

*சகரியா 14:4 அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும்; அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன்நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம்; அதினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும் ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும்.*

இரண்டாம் வருகையில் பூமிக்கு வரும் இயேசு கிறிஸ்து தன் பாதங்கள் ஒலிவ மலையின் மேல் இருக்கும்படியாக நிற்பார். அப்போது ஒலிவ



மலை கிழக்கு மேற்காக எதிர் எதிராக பிளக்கும். அதனால் அதன் இடையில் ஒரு பெரிய பள்ளத்தாக்கு உருவாகும். இஸ்ரவேல் ஜனம், யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களில் பூமியதிர்ச்சிக்கு முன்பு தப்பியோடியதைப்போன்று, இந்த பள்ளத்தாக்கின் வழியாக தப்பி ஓடும்.

*சக 14:8 அந்நாளிலே ஜீவதண்ணீர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டு, பாதி கிழக்குச் சமுத்திரத்துக்கும், பாதி மேற்குச் சமுத்திரத்துக்கும் போய், மாரிகாலத்துக்கும் கோடைகாலத்துக்கும் இருக்கும்.*

**கிழக்கு *சமுத்திரம்*** என்பது, ஒலிவ மலைக்கும் கிழக்கே இருக்கிற **சவக்கடல். சமுத்திரம்** என்பது ஒலிவ மலைக்கும் மேற்கே இருக்கிற **மத்தியத்தரைக்கடல்.**




எருசலேமுக்கு சற்று வடக்கில் அமைந்திருக்கும் தேவாலயத்தின் வாசல்படியின் கீழிருந்து புறப்படும் நதியானது, தெற்காக நகரத்தின் வழியாக பாய்ந்து பின் இரண்டாக பிரியும். ஒரு பாதி மத்தியதரைக் கடலுக்கும் மற்றொரு பாதி சவக்கடலுக்கும் செல்லும். கோடைகாலத்திலும் குளிர்காலத்திலும் அது பாய்ந்து அது செல்லுமிடமெல்லாம் ஆரோக்கியத்தையும் ஜீவனையும் கொடுக்கும் *( எசே 47:1-12 ).* இந்த நதி பாய்வதன் ஒரு நொக்கம் என்னவென்றால், அது சவக்கடலில் பாய்ந்து சவக்கடலை குணமாக்கும். அப்போது சவக்கடல் முழுவதும் மீன்களால் நிறைந்திருக்கும் *( எசே 47:8-10 )*

----------------------------------------

**என் இயேசு ராஜா பூமிக்கு மீண்டும் வருவார்.........**
**எண்ணிலடங்கா தூதரோடு..... விண்ணிலடங்கா பரிசுத்தவான்களோடு...**
**மகிமையின் ராஜாவாய்.....மேகங்கள் நடுவில்....**
**நீதியுள்ள நீதிபரராய் நியாயந்தீர்க்க,**
**அவரோடு கூட நானும் வருவேன்.... என் வலது புறமும் இடது புறமும் ஏராளமான பரிசுத்தவான்களும் தூதர்களும் வருவார்கள்.**

**இப்படிப்பட்ட உறுதியோடு இருக்கிறோமா !**

**ஆயத்தமாயிருப்போம்....... மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துவோம்**

***குறிப்பு: இதன் தொடர்ச்சியாக* -அர்மகெதோன் யுத்தம், ஆயிர வருட அரசாட்சி, கோக் மகோக் யுத்தம், வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு - போன்ற வேதபாடங்கள் வெளியிடப்படும். தயவு செய்து தொடர்ந்து படித்து பயனடையுங்கள்.**

இதற்கு முன்பு தொடர்ச்சியாக வேதாகம ஆட்சி முறைக்காலங்கள், சபை எடுத்துக்கொள்ளப்படுதல், அந்திக்கிறிஸ்து, உபத்திரவக்கால சம்பவங்கள் ஆகிய வேதபாடங்கள் **வெளியிடப்பட்டுள்ளன.**

**இயேசு கிறிஸ்துவின் இரண்டாம்வருகைப்பற்றியதான வீடியோவை - (Power point slide show with narration and Bible references in Tamil) நம்முடைய இணையதளத்தின் "வீடியோ" பகுதியிலேயோ அல்லது http://youtu.be/kxg3QM_MnwM என்ற இணைப்பிலோ பார்வையிடும்படி உங்களை அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.**

**நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஆசீர்வாதமாக இருங்கள்.**

**Bro D.Vergin Kumar.**
**Design, editing and special effects; Bro. Donald.**
If you need any clarifications, if you have any doubts kindly contact me at deeveekumar@yahoo.com
Ph: 968 25572195, 99663557.

Resources; International Standard Bible Encyclopedia, The Bible Exposition commentary - New Testament, Dakes bible commentary, Andrew Wommack Bible commentary, Vine's Expository Dictionary of Old Testament Words, Vine's Expository Dictionary of New Testament Words, Strong's Bible Concordance, Vincent's Word Studies in the New Testament, Scofield's Bible Dispensational Plan. Wuest's word studies from the Greek New Testament. The Biblical Illustrator (New Testament). All Bible quotes are from King James Version. In Tamil Bible, some verses may be above or below than the mentioned English Bible verse.

------------------------